# யுத்தத்திற்கு என் நிதியிலிருந்து ஒரு சதமும் கொடுக்கமாட்டேன்



கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன

நீங்கள் என்னைச் சுடுவீர்களானால் அதில் பொருள் இருக்கிறது. நீங்கள் கூறுவது போல் நான் ஒரு புலி. நான் பிரபாகரன், பிரபாகரனின் சித்தப்பன், நான் ஊர்வலம் சென்றால் சுட வேண்டும். நான் யுத்தத்தை நிறுத்துங்கள் என்று கூறுபவன்.

ஜனதா விமுக்தி பெரமுனை உறுப்பினர்களைப் பார்த்து கேட்கிறேன்! தற்போது நடைபெறும் யுத்தம் ஒரு போலியான யுத்தம். யுத்தம் உரிய முறையில் நடத்தப்படவில்லை என விமர்சிக்கின்றீர்கள். இன்றுள்ள கேள்வி என்னவென்றால் வடக்கிலே தமிழர்களின் எழுச்சி அடக்கப்பட வேண்டுமா? அல்லது அரசியல் தீர்வு வழங்கப்பட்டு யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமா? உண்மை கூறாமல், போலிக்கதைகளை நீங்கள் கூறித்திரிவது உங்களின் நய வஞ்சகத்தின் வெளிப்பாடாகும்.

எனது ஒதுக்கீட்டில் இருந்து இந்த யுத்தத்திற்கு ஒரு சதத்தையேனும் நான் தரத் தயாரில்லை. இந்தச் சபையில் மட்டுமல்ல எல்லாச் சபைகளிலும் இதையே கூறுவேன்.

- கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன



# யுத்தத்திற்கு என் நிதியிலிருந்து ஒரு சதமும் கொடுக்கமாட்டேன்

கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன

புதிய சமதர்மம் வெளியீடு

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | யுத்தத்திற்கு என் நிதியிலிருந்து ஒரு சதமும் கொடுக்கமாட்டேன் (உரை) |
| ஆசிரியர் | : | விக்ரமபாகு கருணாரத்ன |
| வெளியீட்டாண்டு | : | மே 01, 2001 |
| அச்சு | : | ரெக்னோ பிரிண்ட், தெகிவளை |
| வெளியீடு | : | புதிய சமதர்மம் வெளியீடு |
| விலை | : | 20.00 |

# பதிப்புரை

*அன்பார்ந்த வாசகர்களே!*

யுத்தத்தின் கொடுமையால், நாடு பரிதவித்துக் கொண்டிருக்கிறது. தென் இலங்கையில் சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டே சகல அரசியல் கட்சிகளும் செயற்படுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில், யுத்தத்தை நிறுத்தித் தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்கு என்றொரு குரல் மேல்மாகாண சபையில் முழக்கமிட்டுள்ளது.

அவரின் கருத்தை நீங்களும் அறிந்து கொள்ளவே அவ்வுரையை நூல்வடிவில் வெளியிட்டுள்ளோம்.

ஆசிரியர் குழு

*புதிய சமதர்மம்*

# யுத்தத்திற்கு என் நிதியிலிருந்து ஒரு சதமும் கொடுக்கமாட்டேன்

**கௌரவ பிரதித் தலைவர் அவர்களே!**

அரசாங்கம் பொருளாதார நெருக்கடி இல்லையென்று கூறினாலும், நிதி நெருக்கடி வெளிப்படையாகவே காணப்படுகின்றது. இதன் காரண மாகவே பல்வேறு துறைகளுக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளது. ரூபாவின் மதிப்பு குறைக்கப்படுவதற்கும் நிதி நெருக்கடிக்கும் நெருங்கிய தொடர் புண்டு. அரசின் தலைவர்கள் கூறுகின்றார்கள் இந்த அரசாங்கம் கடந்த காலங்களில் ரூபாவை மிதக்க விடாமல் ஓரளவு கட்டுப்படுத்தியதாகவும் ஆசியாவில் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டபோது கூட, உலக வங்கி கூறியவாறு அன்னியச் செலாவணியை திறந்துவிடாமல் ஒரு தெளிவான பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியதன் பலனாகவே அந்த நெருக்கடி எம்மை அணுகவில்லை என்றும் அதில் இருந்து நாம் விடு பட்டிருக்கிறோம் என்றும் கூறுகின்றார்கள்.

**பிரதித் தலைவர் அவர்களே!**

அவர்கள் கூறுவது உண்மைதான். ரூபாவின் மதிப்பைக் குறைக்குமாறு வலியுறுத்தினார்கள். இல்லாவிடின் அன்னியச் செலாவணிக் கட்டுப் பாட்டைத் தளர்த்தும்படி கட்டாயப்படுத்தினார்கள். மூலதனக் கணக்கைத் திறக்கும்படி வலியுறுத்தினார்கள். உண்மையில் இந்த யோசனைகளை ஐக்கிய தேசியக் கட்சியே தேர்தலின் போது முன்வைத்தது. ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால் இதைத்தான் செய்யப் போவதாகவும் கூறி னார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளை அமுல் செய்யப் போவதாக உறுதியளித்திருந்தனர். ஆனால் இந்த அரசாங்கம் அவ்வாறு செய்ய மாட்டோம் என்று கூறியது. மலேசியா வீழ்ந்த குழியிலே, இந்தோ னேசியா வீழ்ந்த குழியிலே நாம் விழ மாட்டோம் என்றே கூறியது. ஆனால்

திடீரென பொருளாதாரக் கொள்கையாக அல்ல, நிதிக் கொள்கையாக அல்ல, உலக வங்கி முன்வைத்த யோசனைக்கமையவும் அல்ல, திடீரென ரூபாவின் மதிப்பைக் குறைத்தது. சில மாதங்களின் பின் ரூபாவை மிதக்க விட்டது. இவ்வாறு செயற்பட என்ன நடந்தது? ஐக்கிய தேசியக்கட்சி முன்வைத்த யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதா? இல்லையென்றே சந்திரிகா ரூபவாஹினி தொலைக்காட்சியில் தோன்றிக் கூறினார். அப்படி ஏன் அவர் செய்ய வேண்டும்? வடபகுதியைத் தாக்க அவசரமாக பெரும் தொகைக்கு ஆயுதங்கள் வாங்கப்பட்டன. அதற்கு 33 பில்லியன் செலவாகியது. யுத்தத்தைத் தீவிரப்படுத்த பெரும் அளவு எண்ணெய் தேவைப்பட்டது. அதற்கு 35 பில்லியன் செலவு செய்யப் பட்டது என விளக்கமளித்தார்.

இது பொதுவான குடிமக்களின் தேவைக்கல்ல, நடத்தப்படும் யுத்தத் திற்குத்தான் இவ்வளவு பெருந்தொகைப் பணம் செலவுசெய்யப்பட்டது. மொத்தமாகப் பார்த்தால் 50 பில்லியனுக்கு மேற்பட்ட ஒரு தொகைப் பணம் உடனடியாக செலவு செய்யப்பட்டது. அதுவும் அன்னியச் செலவாணியிலேயே செலுத்தப்பட்டுள்ளது. இதுதான் இந்த நிதி நெருக் கடிக்குக் காரணம். இந்த நிதி நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமானால் அனைத்து செலவினங்களையும் வெட்ட வேண்டும். தியாகம் செய்ய வேண்டும் என்று ரூபவாஹினியில் கூறினார். இதன் காரணமாக சம்பள உயர்வு அளிக்கமுடியாது, சம்பளத்தைக் கூட்டுமாறு கூறவேண்டாம், மீறி ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டால் எனது ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி அடக்குவேன் என்று கூறினார். இப்பொழுது அனைவருமே இந்த யுத்தத்திற்கு உதவ வேண்டும் என்றார். அப்பொழுது ஒரு சிங்களப்பட்டதாரி அம்மையாரே! எங்களுக்குத் தொழில் தரமாட்டீர் களா? எனக் கேட்டார். தொழில் வழங்க முடியாது. இந்த நேரம் அதை ஞாபகப்படுத்தவும் வேண்டாம் என்றார். இன்னும் ஒருவர் வேலையில் இருந்து தூக்கியெறியப்பட்ட எங்களுக்கு நட்டஈடு தரவேண்டியுள்ளது நீங்கள் நட்டஈட்டை வழங்குவீர்களா? எனக் கேட்டார். அம்மையார் அவர்கள் நட்டஈடு வழங்கமுடியாது, தயவு செய்து அதை நினைவூட்ட வேண்டாம் அதைக் கொடுக்க முடியாது, யூன் மாதம் வரை பொறுத் திருங்கள் என்றார். யூன் மாதத்திற்குப் பின் கொடுக்கப்படுவதை நிச்சயப் படுத்தவும் முடியாது என்றார். அரசாங்கம் மிகத் தெளிவாகவே அதன் கருத்தை முன் வைத்துள்ளது. அது என்ன? இந்தப் பணத்தை எல்லாம் திரட்டி, இந்தத் திடீர் டொலர் நெருக்கடிக்கு, இந்த அன்னியச் செலா வணிக்கு முகம் கொடுத்து பணவீக்கத்தை கட்டுப்படுத்தி யுத்தத்தைச் செய்ய வேண்டும் என்பதாகும்.

இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன். நாம் இதற்கு பங்களிப்பதா அல்லது இல்லையா என்பதாகும். நான் ஒன்றை மிகத் தெளிவாக கூறிவைக்க விரும்புகிறேன். அரசாங்கத்தின் யுத்தக் கொள்கையை எதிர்ப்பவன் என்ற அடிப்படையில் இந்த யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை அளிக்க வேண்டுமென கூறுபவன் என்பதால் இந்த வெட்டுக்களை எதிர்க்கிறேன். இந்த யுத்தத்திற்கு ஒரு சதத்தைத் தானும் கொடுப்பதை எதிர்க்கிறேன்.

இந்தச்சபையின் மற்றவர்களையும் கேட்கிறேன்; ஆளுங்கட்சியினரை, ஐக்கிய தேசியக் கட்சியினரை, மக்கள் விடுதலை முன்னணியினரை, ஜனாதிபதி விடுத்த சவாலை ஏற்று அதற்கு முகம் கொடுத்தா பேசுகிறீர்கள் எனக் கேட்கிறேன். பொய்யான, போலியான வாதங்களை முன்வைக்காதீர்கள். இந்த நாட்டில் டொலர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மலேசியப் பிரதமர் மஹதிர் மொஹமட் போல உலக வங்கியின் ஆலோசனைக்கிணங்க டொலருக்கேற்ற வீதாசாரத்தில் ரூபாவின் மதிப்பைக் குறைக்கும்படி கூறியதை பொருளாதாரக் கொள்கையாக ஏற்றுக் கொண்டு இச் சந்தர்ப்பத்தில் செயல்பட்டதனால் அல்ல. இந்த யோசனையில் ஐக்கிய தேசியக் கட்சியினராகிய உங்களின் பொருளாதாரக் கொள்கை இருக்கிறது. எவரும் பயன்படுத்தக்கூடிய வகையில் இந்த நாட்டில் முதலீடு செய்யவும், முதலீட்டை எடுத்துச் செல்லவும் திறந்து விடப்பட்டுள்ளது. உங்களின் பொருளியல் விற்பன்னர் மிலிந்து மொரகொட ஐயா அவர்கள் இதை எங்களுடன் சரியான முறையில் கலந்துரையாடிச் செய்திருக்கலாம் என்று கூறியுள்ளார். அரசாங்கம் இந்தளவு பெரிய பணத்தொகையைப் பயன்படுத்தும் காரணத்தைப் பற்றிக் கதைக்காமல், அவ்வாறு செய்வது சரியா, தவறா என்பதை விவாதிக்காமல் வெறுமனே ஜனாதிபதி அவர்கள் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மேற்கொண்டுள்ள வெட்டுக்களுக்கு ஆதரவளியுங்கள் என்று கேட்கும் போது இத்தகைய யுத்தச் செலவுக்கு நாங்கள் எதிர்ப்பு என ஆணித்தரமாகக் கூறாமல் வெறும் நலன்புரி விடயங்களாக உள்ள, மக்களுக்கு வீடு கட்ட வேண்டும் நலன்புரி ஒதுக்கீடுகளை வெட்டுவது பிழையென ஆளும்கட்சி உறுப்பினர்களாகிய நீங்கள் எந்த அடிப்படையில் கூறுகின்றீர்கள் என்று கேட்கிறேன். அம்மையார் அவர்கள் மிகமிக அத்தியாவசியமான சம்பள உயர்வை ஒத்திப் போடுங்கள், அதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை வெட்டி யுத்தத்திற்குத் தாருங்கள் என கூறியிருக்கின்றார்.

இதற்கு சவால் விடும் நோக்கில் நீங்கள் பேசுவதாக இருந்தால் அரசின் யுத்தக் கொள்கையை எதிர்த்து யுத்தத்தை நிறுத்தும்படி கோர வேண்டும். அங்ஙனம் இல்லாமல் யுத்தத்திற்கு 'ஜே', சந்திரிகா அம்மையார் வெல்க,

பல்குழல் பீரங்கி வெல்க, என வாழ்த்தி விட்டு இங்கு வந்து என்னுடைய 3லட்சத்தைக் காப்பாற்றுங்கள், 7இலட்சத்தை திரும்பத் தாருங்கள் எனக் கோருவது ஒரு அர்த்தமற்ற நடவடிக்கையாகும்.

மக்கள் விடுதலை முன்னணியின் சக உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்கிறேன், தற்போது நடைபெறும் யுத்தம் ஒரு போலியான யுத்தம், யுத்தம் உரிய முறையில் நடத்தப்படவில்லை என விமர்சித்து வருகிறீர்கள். இன்றுள்ள கேள்வி என்னவென்றால் வடக்கிலே தமிழர்களின் விடுதலை எழுச்சி அடக்கப்பட வேண்டுமா? அல்லது அரசியல் தீர்வொன்றைக் கொடுத்து பிராந்திய ரீதியில் அரசியலாட்சி அதிகாரத்தை வழங்கி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமா? யுத்தத்தை நிறுத்தி நிதி நெருக்கடியை இல்லாமல் செய்யுங்கள் என விடை பகராமல் போலியான கதைகளைக் கூறித் திரிவது, மக்கள் விடுதலை முன்னணியின் நயவஞ்சகத்தின் வெளிப்பாடாகும்.

மக்கள் விடுதலை முன்னணியினராகிய நீங்கள் இங்கு வந்து மஹதிர் மொஹமட்டின் செயற்பாடு பற்றி கூறுகிறீர்கள். இந்த அரசாங்கத்தின் செயற்பாடு பற்றியும் கூறுகின்றீர்கள். டொலருக்கு ஏற்ற விதத்தில் ரூபாயின் மதிப்பை குறைத்தது எதற்காக? இங்ஙனம் மிதக்கவிட்டமைக்கு அடிப்படைக் காரணம் என்ன? என்று கேளுங்கள். மஹதிர் மொஹமட்டிற்கு ஏற்பட்ட பிரச்சினை அல்ல இங்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினை.

இங்கே ஏற்பட்டுள்ள பிரச்சினை யுத்தத்தினால் ஏற்பட்ட பிரச்சினையாகும். உலக வங்கி கூறியதனால் ரூபாயின் மதிப்பு டொலருக்கு ஏற்ற விதத்தில் குறைக்கப்பட்டுள்ளது. பணவீக்கம் கூடியுள்ளது. எங்களுக்கு மேலதிகப் பணம் வேண்டும் எனக் கூறினால், அது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. நீங்கள் இரவிலே ஒரு கதையும், பகலிலே வேறொரு கொள்கையையும் பின்பற்றுகிறீர்கள். நீங்கள் யுத்தத்தை ஆதரிக்கின்றீர்கள். ஐக்கிய தேசியக் கட்சியும் யுத்தத்திற்கு ஆதரவாகவே உள்ளது. கண்டியிலிருந்து கொழும்புக்கு ஊர்வலம் ஒன்று வந்தது. இந்த ஊர்வலம் அரசாங்கத்திற்கு எதிராகவா வந்தது? இல்லை. பிரதித் தலைவர் அவர்களே, ரணில் ஐயா அவர்கள் சந்திரிகாவின் முழுப் பாதுகாப்புடன் ஏ. எஸ். பி. மார், டி.ஐ. ஜீக்கள் சூழ்ந்து வர கொழும்புக்கு அழைத்துவரப்பட்டார். யாரால் அரசாங்கத்தினால். (கூச்சல்) (கௌரவ உறுப்பினர் ஒருவர் : பார்த்தீர்களா?)

வெளியே நின்று ஒரு மணித்தியாலமாக பார்த்துக் கொண்டு நின்றேன். பொலிசார் அங்கும் இங்கும் தள்ளுகின்றார்கள். ஜனாதிபதி அவர்கள் வருகின்றார் என நான் நினைத்தேன். வந்தது அவரில்லை. எமது எதிர்க்

கட்சித் தலைவரை பொலிஸ் அழைத்து வந்தனர். அரசாங்கத்திற்கு எதிர்ப்பு இதுதானா? யுத்தத்திற்கு ஆயுதம் வாங்கிப் பணம் வீண்விரயம் செய்யப் படுகிறது என்பது போன்ற ஒரு சுலோகமாவது ஊர்வலத்தில் சொல்லப் படவில்லை. இந்த யுத்தம் பெரும் அழிவென்று கூறப்பட்டிருந்ததா? 50 பில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது தவறு. மக்களின் உணவுக்கான நிதி, இந்நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கான நிதி, இந்நாட்டு மக்களுக்கு வீடுகள் அமைப்பதற்கான நிதி, இந்நாட்டு மக்களுக்கு வைத்தியசாலைகள் அமைப்பதற்கான நிதி, இந்நாட்டு மக்களுக்கு நட்ட ஈடு வழங்குவதற்கான நிதி, இதை ஏன் யுத்தத்துக்குப் பயன் படுத்துகின்றீர்கள்? இந்த பேரழிவு யுத்தத்தை நிறுத்துங்கள் என ஒரு சுலோகமாவது இருந்ததா? இல்லை.

நான் ஆரம்பம் முதல், மக்கள் சக்தியை வழி நடத்தி வந்த யானையின் தொடக்கத்தில் இருந்து வால் வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு இடத்திலாவது நான் கூறிய சுலோகம் இருக்கவில்லை. இந்த ஊர்வலத்தில் கேலிக்காக சந்திரிகா அம்மையார் போல் உடை அணிந்து ஒருவர் சென் றார். அந்த ஊர்வலத்தில் செல்லத் தகுதி உடைய அமைச்சர்தான் இங்குள்ள அமைச்சர் பெத்மகே அவர்கள். அவர்தான் இங்குள்ள ஒரு கோமாளி. கோமாளிகளுக்கு உகந்த ஊர்வலமே அது. அரசாங்கத்தை விமர்சிக்கும், உண்மையில் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் அழிவை அம்பலப் படுத்தும், இந்த யுத்தம் பற்றிய கேள்வியை எழுப்பும், இந்த நாட்டின் மக்களின் நலன்புரி நடவடிக்கைகளை ஏன் வெட்டுகிறீர்கள்? இந்நாட்டு மக்களின் வேலைவாய்ப்புகளை ஏன் நிறுத்தினீர்கள்? இவ்வாறான அழிவு ஏன் ஏற்படுகிறது எனக்காட்ட முயற்சி எடுக்காத ஒரு வெற்று ஊர்வலமே அது. இவ்வாறான ஊர்வலம் நடைபெறும் போது பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. இதில் பயப்படுவதற்கு எதுவுமில்லை.

மக்கள் விடுதலை முன்னணி எந்த சுலோகத்தை தமது ஊர்வலத்தில் தாங்கிச் சென்றது? பண்டங்களின் விலையை குறை, அதிகாரத்தைப் பகிராதே,என்பவைகளாகும். அதிகாரத்தைப் பகிராதே என்பது யுத்தத்தை செய் என்பதாகும். அதிகாரத்தை பகிராதே என்பதன் மூலம் ஒற்றை ஆட்சிக்கு பாதுகாப்பளி என்று தான் கூறுகின்றீர்கள்? இதை கௌரவ உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க மிகத் தெளிவாக விளங்கப்படுத்தினார். அதிகாரத்தை பகிர வேண்டாம், மாகாண சபை வேண்டாம் என்று மக்கள் விடுதலை முன்னணி கூறுவது அதிகாரம் வேண்டாம், மாகாண சபையை கலைத்து விடு என்பதாகும். பெயருக்காக மாத்திரமே பண்ட விலையைக் குறை என்ற சுலோகத்தைப் போட்டனர்.

மக்கள் விடுதலை முன்னணியினரின் உண்மையான சுலோகம் என்ன? அதிகாரத்தைப் பகிராதே, யுத்தம் செய் என்பதாகும். அதிகாரத்தை பகிர வேண்டாம் என்றால் என்ன அர்த்தத்தில் கூறுகின்றீகள்? அவர்கள் கூறுவது, தமிழனைக் கொல், தமிழனைக் கொன்று மிதித்தாவது இதைச் செய்யுங்கள்; இதற்கு கோடிக்கணக்கான நிதி வேண்டும். இதையே இன்று அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. தமிழ் மக்களைக் கொன்று குவித்துக் கொண்டே போகின்றார்கள். குடிமனைகளை இடித்துத் தள்ளு கிறார்கள். அப்படியானால் ஒத்துழையுங்கள் ஆதரவளியுங்கள் சந்திரிகா அம்மையாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதையே இது கூறுகிறது. யுத்தத்தை எதிர்ப்பவர்கள் அரசாங்கத்தில் தான் இருக்கிறார்கள். யுத்தம் செய்யாமல் இந்த நலன்புரி சேவைகளைச் செய்வோம் என்றால் நல்லது என்று கூறுகின்றார்கள். ஆம், அவ்வாறு கூறுபவர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள். உறுப்பினர் ரேணுகா பெரேரா யுத்தத்தை நிறுத்தி இவற்றை செய்வது நல்லது எனக் கூறுகிறார். பிரதித்தலைவர் அவர்களே, நீங்களும் அதைத்தான் கூறுகிறீர்கள், இப்படிச் சொல்பவர்களும் இருக் கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் யுத்தத்தை நிறுத்தி இதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றார். இப்படிச் சொல்பவர்கள் இந்த அரசாங்கத்தில் இருக்கின்றார்கள். கம்யூனிஸ்ட் கட்சி அமைச்சர் அவர்கள் மனசாட்சிக்கிணங்க இந்த யுத்தத்திற்கு இணங்க முடியாது. இந்த நிலை மையை மாற்றியமைக்க வேண்டும் எனக் கூறுகிறார். இவ்வாறு கூறுபவர் கள் அங்கே இருக்கிறார்கள். இங்கே எதிர்க்கட்சியில் வெளிப்படை யாகவோ, மறைமுகமாகவோ யுத்தத்தை நடத்துங்கள் என்று கூறுபவர்கள் இருக்கின்றார்கள். மக்கள் விடுதலை முன்னணி இங்கு வந்து வெறுமனே கூச்சலிடுகிறது. வெறும் கவர்ச்சிக்காக.

**கௌரவ பிரதித்திலைவர் அவர்களே,**

இந்த அப்பாவிகளை ஏன் றப்பர் தோட்டாக்களினால் சுட்டீர்கள், அவர்கள் யுத்தம் செய்யுங்கள், ஜனாதிபதி அவர்கள் வெல்க, என்றல்லவா ஊர்வலம் போனார்கள். அவர்களை ஏன் சுட்டீர்கள்? இது ஒரு அர்த்தமற்ற செயலாகும். ஆம். என்னை சுடுவீர்களானால் அதில் ஒரு பொருள் இருக்கிறது. நீங்கள் கூறுவது போல் நான் ஒரு புலி, நான் பிரபாகரன், பிரபாகரனின் சித்தப்பன். நான் ஊர்வலம் சென்றால் சுட வேண்டும். நான் யுத்தம் வேண்டாம் என்று கூறுபவன். யுத்தத்தை நிறுத்துங்கள் என்று கூறுபவன் இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்கு அவர்களின் சுயாட்சியை வழங்க வேண்டும் என்று கூறுபவன். இந்தச் சந்தர்ப்பத்தில் வெளிப்படை யாகவே யுத்தத்தைத் தடுக்கும் ஒருவனாகிய எனக்கு வெடிவைப்பார்

களானால் அது கேள்விக்குரியதல்ல. ஆனால் இந்த அப்பாவி மக்கள் விடுதலை முன்னணியினர் மாகாணசபை வேண்டாம் எனக் கோசமிட்டு, வீதியிலே சென்றவர்கள். ''மாகாணசபை எமக்கு வேண்டாம்'' ''யுத்தம் செய்து அடக்கி விடு'' ''ஒற்றை ஆட்சியைக் கட்டியெழுப்புங்கள்'', என ஊர்வலம் சென்றவர்கள் இந்த யுத்த பிரியர்களை, அம்மையாருக்கு ஒத்துழைப்பு ஆதரவை அளிப்பவர்களை, யுத்தத்திற்கு ஒத்துழைப் பவர்களை, யுத்தம் செய் என்பவர்களை ஏன் சுட்டீர்கள். ரப்பர் தோட் டாக்களினால் ஏன் சுட்டீர்கள்'' இது பெரிய அநியாயம்.

கௌரவ பிரதித் தலைவர் அவர்களே! ஐக்கிய தேசியக் கட்சியை சரியான முறையில் கவனித்தீர்கள். அது உங்களின் நண்பர்களின் ஊர்வலம் என்பது உங்களுக்குத் தெரியும். அதனால் பூரண பாதுகாப்பளித்தீர்கள். எங்கள் வாகனங்களை விரட்டி, எனது வாகனத்தை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைக்கும்படி கூறினார்கள். பின்பு பொலிஸ் வந்து மேலும் தூர நிற்கும்படி கூறினார்கள். இந்த ஊர்வலம் வருகிறது! கொம்பன் யானை முன்னே வந்து கொண்டிருக்கிறது. பொலிஸ் வருகிறது. அரசாங்கம் தனது முழு சக்தி யையும் பாவித்து பாதுகாப்பளித்தது. இப்படியான பாதயாத்திரையை நாம் ஒரு போதும் நினைத்தது இல்லை. ஐயா, ரணில் அவர்கள் அப்படியே உலாவிக் கொண்டு வருகிறார். அதை நான் நன்றாக பார்த்தேன். நடந்து வர எந்த கஷ்டமும் இருக்கவில்லை. நடனக்காரர்கள் நடனமாடுகின்றார்கள். பாதுகாப்பாளர்களும் நடனக்காரர்கள் ஆகி ஆடினர். பொலிஸ் பாது காவலர் கண்டிய உடை அணிந்து ஆடினர். ரணிலைப் பார்க்கவே முடிய வில்லை. இந்தா ரணில் ஐயா வருகிறார் என்றார்கள். என்னைப் பார்த்து, ஹாய், என்ற போது தான் கண்டேன். ஆனாலும் அவர் நடந்து வருவதைப் பார்க்க முடியாமலே இருந்தது. அந்த அளவிற்கு அவரைச் சூழ பாதுகாப்பு அணி, பாதுகாப்பு வழங்கினார்கள். ஜனாதிபதியை விட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இப்படித்தான் ஊர்வலம் வந்தது. நீங்களும் சரியாகவே செய்திருக்கிறீர்கள். எந்தத்தடையும் இன்றி, ஐக்கிய தேசியக் கட்சி ஊர்வலம் நடத்த இடமளித்திருந்தீர்கள். ஐக்கிய தேசியக் கட்சி மறைமுகமாக உங்களுக்கு உதவும் கட்சி என்பதை நீங்கள் புரிந்து வைத்திருக்கிறீர்கள். அது போலவே மக்கள் விடுதலை முன்னணிக்கும் நீங்கள் உதவி செய்ய வேண்டும். அவர்களும் ஊர்வலம் செல்லட்டும். உங்களுக்கு இப்போது தேவைப்படுவது யுத்தமாகும். யுத்தத்தை செய் என்று சொல்லும் கட்சி என்ற அடிப்படையில் அவர்கள் எதையாவது சொல்லிவிட்டு போகட்டும். மாகாண சபையில் நிதி ஒதுக்கும்படி கூறட்டும். அதில் எந்த பயனும் இல்லை. யுத்தம் வேண்டாம் என்று கூறாமல் வேறெதையுமே சொல்லட்டும். ஊர்வலம் சொல்ல இடமளி

யுங்கள். அவர்களை பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லுங்கள். இந்த நேரத்தில் அவர்கள் அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் நாளை மறுநாள் என்ன செய்வார்கள் என்பதை சொல்ல முடியாது. இந்த நேரத்தில் நீங்கள் கடைப்பிடிக்கும் கொள்கைக்கு எதிரானவர்கள் இல்லை என்பதை மட்டும் கூற முடியும்.

யுத்தத்திற்கு எதிராகப் பேசும் ஒருவரைத் தவிர வேறு யாருக்கும் இப்பண ஒதுக்கீட்டைக் கேட்க உரிமை இல்லை. இந்த நிதி வெட்டு யுத்தத்திற்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த யுத்தப் பேரழிவை நிறுத்துங்கள் என்று கேட்க முடியாவிட்டால் இந்த பணத்தை கேட்க எவருக்கும் உரிமை இல்லை. ஆகையால் கௌரவபிரதித் தலைவர் அவர்களே, இந்த யுத்தம் எப்படிப் போகும் என்று அனைவரும் பார்த்துக் கொண்டு இருக்கின்றனர். இங்கிலாந்து புலிகளைக் கொல்லுமா? இங்கிலாந்து இதைத் தடை செய்யுமா? இந்த விளையாட்டைச் செய்வதற்கு ஏகாதிபத்திய வெள்ளையனை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். புலிகளைத் தடை செய்தால் எங்களுடைய வேலை சரி, எமது பஞ்சப் பாட்டும் சரி வந்து விடும். வெட்டப்பட்ட பணமும் திரும்ப கிடைத்து விடும். அப்போது எல்லாமே சரியாகி விடும். எனப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இப்படியான கேலிக்கூத்தான உலகிலே தான் நாம் இருக்கின்றோம். எங்களுடைய பிரச்சினையை நாம் தீர்த்துக் கொள்ளாமல் இப்போது லண்டனுக்குப் பொறுப்புக் கொடுத்துள்ளோம்.

**கௌரவ பிரதித் தலைவர் அவர்களே!**

உங்கள் மனச்சாட்சிப்படி, உங்கள் நெஞ்சைத் தொட்டுப் பாருங்கள். இவ்வாறு அந்நியர்களை எமது உள்நாட்டு பிரச்சினையில் தலையிட அனுமதித்து விட்டு, அதன் மூலம் தீர்வைத் தேடும் நாட்டு தலைவர்களுக்கு என்ன நடந்தது? இறுதியில் எப்படிச் சென்றனர். ஆகையால்தான் கேட்கின்றேன். எம்மிடம் இருந்து வெட்டப்பட்ட பணத்தைத் தாருங்கள். எனது ஒதுக்கீட்டில் இருந்து இந்த யுத்தத்திற்கு ஒரு சதத்தையேனும் நான் தரத் தயாரில்லை. எனக்குரிய பணத்தைத் தாருங்கள். இந்த சபையில் மட்டுமல்ல, எல்லாச் சபைகளிலும் இந்த யுத்தத்திற்கு எதிரானவர்களுக்கும் இதையே கூறுவேன். எழுந்து நில்லுங்கள். எழுந்து நின்று இந்த பணத்தைக் கேட்டுப் போராடுங்கள்! என்று கூறிக் கொண்டு எனது உரையை முடிக்கின்றேன்.

முற்போக்கான

சிந்தனைத் தெளிவுடன்

அரசியல், அறிவியல்,

கலை இலக்கிய அம்சங்களுடன்

உங்கள் கரங்களில்...

புதிய

# சமதர்மம்

**என்றும், எந்த நேரத்திலும், எப்போதும்,**
**எல்லா இடங்களிலும் விற்பனையில்....**
**வாசிக்கத் தவறாதீர்கள்**